

# விடியல்களுக்கு வெளிச்சம் தரும் சிலுவை வழி விடையங்கள்

A C Dsilva St Joseph's Church Wellington. Ooty Diocese 8825576373

## விடியல்களின் வெளிச்சத்திற்குச் சிலுவை வழி விடையங்கள் .

*திருஅவை இந்த ஆண்டை இளையோர் ஆண்டாகச் சிறப்பிக்கின்றது. இளையோர்கள் என்ற உடனேயே யுக யுகமாகச் சகலத் திறமைகளையும் வனப்பையும் வலிமையையும் கொண்டவர்கள் என்று பொருள் கொள்கின்றோம். அவர்களைக்காணும்போது நம்பிக்கையும் மகிழ்ச்சியும் நாம் பெறுகின்றோம். அதிகாலை விடியல் உலகிற்கு மகிழ்ச்சியைத் தருவதுபோல் மனிதச் சமுதாயத்தின் விடியல்களாக வலம் வரும் இளைஞர்களும் அனைவருக்கும் நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் தரக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.*

*நாம் காணும் இன்றைய இளைய சமுதாயம் இப்படித்தான் இருக்கின்றதா ? அப்படி இல்லையென்றால் அவர்களை எதனால் வெளிச்சம் உள்ளவர்களாக மாற்ற முடியும் என்பதற்கான ! சிறு முயற்சியே இந்த "விடியல்களுக்கு வெளிச்சம் தரும் சிலுவை வழி விடையங்கள்" என்ற தியான தொகுப்பு*

*இந்த உலகிற்கு மாபெரும் விடியலாக 33 வயது வாலிபரான இயேசு வலம் வருகின்றார். அப்படியிருக்க அவரில் இணைந்திருக்கும் நமது சமுதாய இளைஞர்களின் பங்களிப்பு இன்னும் சிறப்பாக இருப்பதற்காகச் சிலுவை வழி விடையங்களைத் தொடர்ந்திட முன் செல்வோம்.*

*பெரியோர்கள் ஆகிய நம்முடைய ஒத்துழைப்பும் இதில் மிகமிக முக்கியம் என்பதையும் புரிந்து கொள்வோம். விவிலியத்தில் வரும் ஆபெல், சாமுவேல், யோசேப்பு, தாவீது , தீச் சூளைக்குள் இருந்த அந்த மூன்று இளைஞர்கள்- ஏன் கன்னி மரியாள் என ; எல்லா இளையோரும் இறை அருளுள் நிலைத்து நின்றார்கள் என்பது நினைவுக் கூறப்பட வேண்டிய செய்தி. பணக்கார வாலிபனிடமிருந்த குறையை ஆண்டவர் இயேசு எடுத்துக்கூறினார். இயேசுவின் சிலுவை வழித் தியானம் நமது குறைகளில் இருந்து நமக்கும் நமது இளைய சமுதாயத்திற்கும் விடுதலையைத் தரட்டும்.*

*இவன்*

**"உங்களயலான்"**

## முதல் நிலை

*இயேசு சிலுவை மரணத்தை ஏற்றுக் கொள்கிறார்*

*திவ்விய இயேசுவே.......*

*மனத்தெளிவும் தைரியமும் மட்டுமே*
*தீர்மானங்களை முழுமையாக நிறைவேற்றும்*

*புதிய ஏற்பாட்டில் ஓர் ஆண் ஒரு பெண் என இருவர் முன் - வாழ்வாச் சாவா என்ற நிர்பந்தங்கள் நிறுத்தப்பட்டன. ஆம் , கன்னிமரியாளுக்குக் கணவனை அறியாமல் ஆண் மகவைப் பெறவேண்டும் என்ற நிர்பந்தம்; இயேசுவிற்கு, நீதிமானாக இருந்தபோதும் சிலுவைச் சாவை ஏற்றாக வேண்டும் என்ற நிர்பந்தம் . இந்த இக்கட்டான சூழலில் கன்னிமரியாள் தேவதூதனிடமும், இயேசு கெத்சமனேக்குள் தந்தையாம் கடவுளிடமும்; கலந்து உரையாடி; முடிவாக இருவரும் இறை விருப்பத்திற்குத் தங்களை முழுமையாக ஒப்புக் கொடுத்தார்கள். இவர்கள் தங்கள் முன் நின்ற நிர்பந்தங்களைக் கடந்து செயல்படக் கடவுளின் மனிதரையும், தந்தையாம் கடவுளையும் நம்பி , கலந்தாலோசித்து மனத்தெளிவும் தைரியமும் பெற்றுக்கொண்டனர். முடிவாக , மரியாள் தன்னை ஆண்டவனின் அடிமை என்றாள் - உலகிற்கு இம்மானுவேலனைத் தந்தார் ; இம்மானுவேலனோ உமது சித்தப்படியே ஆகட்டும் என்றார், தன்னைக் கல்வாரியில் சிலுவைப் பீடத்தில் காணிக்கைப் பொருள் ஆக்கினார்*

*இளையோரே , உங்கள் விருப்பு வெறுப்புகளைக் கடந்து, எதிர்காலத்திற்காகச் செயல்படுத்த வேண்டிய நிர்ப்பந்தங்களைச் சற்று நினைவுகொள்ளுங்கள். அனேகமாகக் கண்முன் நிற்கும் நிர்ப்பந்தங்கள் உங்கள் அன்றாட வாழ்வைச் சார்ந்ததாக இருக்கும். நீங்கள் ; அப்படி இருக்கும் அதை, எப்படிச் சந்திக்க உங்களைத் தயார் செய்கிறீர்கள்?. மரியாளும் இயேசுவும்- வாழ்வாச் சாவா என்ற பிரச்சனைக்கே இறைசார்ந்த மனிதரையும், இறைவனையும் முழுமையாக நம்பித் தங்களை அர்ப்பணித்து , ஆண்டவரின் அடிமையாகவும் : கல்வாரி சிலுவைப் பீடத்தின் காணிக்கைப் பொருளாகவும் அர்ப்பணித்தனர். செய்யும், செய்யப் போகின்ற செயல்களில் மனத் தெளிவும் தைரியமும் பெற்றவர்களாக நிறைவும் அமைதியும் அடைந்தார்கள். இவர்களைப்போல இன்று வாழ அழைக்கப்பட்டிருக்கும் நாம் சந்தித்துக் கொண்டிருக்கும் பிரச்சனைகள், நிர்பந்தங்கள் ஆகியவைகளை எவ்வாறு செயல்படுத்திட, கடந்து சென்றிட, மனத்தெளிவும் தைரியமும் யாரிடம் இருந்து பெற்றுக் கொள்கிறோம் என்பதை யோசிப்போம்.*

*செபம்:-*
*இறைவா எங்களுடைய அன்றாட வாழ்க்கை நிர்பந்தங்களை, எதிர்காலத் திருப்புமுனைகளை மனத் தெளிவுடனும் தைரியத்துடனும் சந்தித்திட; உமது முன்நிலையில் செபித்து அருள்பெற ஆசீர்வதித்தருளும் .*

## இரண்டாம் நிலை

*இயேசு பாரமான சிலுவையைத் தோள்மீது சுமக்கிறார்*

*திவ்விய இயேசுவே*

*மனிதபலம் இறை அருளுடன் இணைந்தால்*
*இமயமும் விலகி வழி கொடுக்கும்.*

*உரோமைச் சேவகர்களின் கொலைவெறி கொடூரசித்திரவதைகளுக்கு உள்ளான , இயேசுவின் உடல்முன் பாரமான மரச்சிலுவை நிறுத்தப்படுகின்றது . இயேசு மனநிறைவோடு இறை சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தவராக , சிலுவையைத் தன் தோள்மீது சுமந்து கொண்டார்.. சித்திரவதைகளுக்கு உள்ளான தன் பலவீனமான உடலால் இந்தப் பாரசுமையை - சிலுவையை எப்படிச் சுமக்க முடியும் என்று நாம் யோசிக்கிறோம். ஆண்டவர் இயேசு இறை அருள் தன்னோடு இருப்பதை யோசித்தார், உணர்ந்தார் - அவரது உடல் உழைப்பு உயிர் பெற்றது; சிலுவையை ஏற்றுக் கொண்டார். ஆம் உயிர் பெற்ற உழைப்பு ஒன்றுதான் உயர்வைத் தரும்.*

*இளைய சமுதாயமே, உங்கள் உடல் உழைப்பு - எதை முன்னிட்டு, எப்போது; எப்படி -செயல்படுகின்றது?. முதலில் உங்கள் உடல் ஆரோக்கியமாக இருப்பதில் கவனம் கொள்கிறீர்களா? . இன்றைய காலகட்டத்தில் உடலால் உண்டாகும் சித்திரவதைகளைவிட, உள்ளத்தால் உண்டாகும் மன அழுத்தங்கள் மிக அதிகம் . இத்தகைய பலவீனங்களோடு நீங்கள் உழைத்திட இறையருள் ஒன்று மட்டுமே உங்களை வழிநடத்தும் , வல்லமையைத் தரும் - என்று ;எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா?. பாருங்கள், பார சிலுவையைத் தன் உடல் பலத்தால் அல்ல, இறைஅருளின் வல்லமையோடு , தன் உடல் தந்த உழைப்போடு - சுமந்த வராக, இயேசு லட்சிய பயணத்தைத் தொடங்கி விட்டார்,ஆம் கல்வாரி பயணம் தொடங்கிவிட்டது. உங்கள் பயணத்தை யாருடைய உழைப்போடு எந்த லட்சியத்திற்காகத் தொடர்கின்றீர்கள்? அல்லது தொடரப் போகிறார்கள்?.*

*செபம்:-*

*இறைவா எங்களுடைய லட்சிய பயணத்தைத் தொடர்ந்திட ,எங்கள் உடல் பலத்தை உமது அருளோடும் வல்லமையோடும் இணைத்து உழைத்து முன்னேற்றம் அடைந்திட , எங்களை ஆசீர்வதியும்.*

## மூன்றாம் நிலை

*மனிதா நான் முதல் முறையாக மண்ணைத் தொட்டேன்...*

*திவ்விய இயேசுவே*

*சோர்வும் களைப்பும் உழைப்பிற்கு இடையூறாகும்.*

*கரடுமுரடான கல்வாரி பாதையில் பலவீனமுற்ற இயேசுவின் உடல் , உழைப்பால் சோர்வும் களைப்பும் அடைந்து நிலை தடுமாறி கீழே விழுந்தது. இயேசு இலட்சியத்திற்காக மீண்டும் உடனே எழுந்து பயணத்தைத் தொடரமுயல்கிறார்..*

*உழைப்பவன் அயர்ந்து விழுவது சகஜம். ஆனால் தன்னிலை உணர்ந்து தனது கடமைக்காக எழுந்திட அவன் அழைக்கப்படுகிறான். உலக மாயை , செல்வம் ஆகியன ஒருவனை ஊதாரி மைந்தன் ஆக்கியது, ஆனால் அவனுடைய தந்தையின் நினைவு, தன் நிலை அறிவு அவனைத் திருந்திய மைந்தன் ஆக்கியது . இடறல் வந்தே தீரும் ஆனால் அது யாரிடமிருந்து வருகிறதோ அவர்களுக்கு ஐயோ கேடு என்று இயேசு கூறியுள்ளார்.. விழிப்புடன் இடர்களைத் தரும் உலக மாயையிடம் எச்சரிக்கையாய் இருங்கள். எப்பொழுதும் முனைப்போடு எழுச்சியை நாடுங்கள்.*

*இன்முக இளைய உள்ளங்களே இன்றுவரை நீங்கள் அனுபவித்த முதல் தடவை அனுபவங்களைப் பின்னோக்கி பாருங்கள். நிச்சயமாக , இந்த முதல்தடவை என்ற அனுபவம் உங்களுக்குப் பல பாடங்களைக் கற்றுத் தந்திருக்கும் . கடவுள் உலகை முதல்முறையாக படைத்து முடித்துப் பார்க்கின்ற அனைத்தும் நன்றாக இருந்தன என்பதில் மகிழ்ச்சி அடைகிறார். இயேசுவும் நீங்களும்_கடவுளுடைய சாயலையும் ஆவியையும் கொண்டு படைக்கப்பட்டு இருக்கின்றீர்கள். நம்முடைய முதல்முறை அனுபவங்கள் நமக்கு மட்டுமல்ல , நம்மோடு பயணிக்கும் அனைவருக்கும் மகிழ்ச்சியையும்- மனநிறைவையும் தருவதாக அமைய வேண்டும் . முதல் பெற்றோரின் விலக்கப்பட்ட கனியின் முதல் அனுபவம் துன்பத்தையும் துயரத்தையும் மனுக்குலத்திற்குத் தொற்று நோயாகத் தந்தது. இயேசுவின் ஒரேமுறை, முதல்முறை கல்வாரிப் பயணம் உங்களுக்கு என்ன தந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். பயணங்கள் தொடரும் எனவே, இனி நீங்கள் சந்திக்கும் உங்கள் முதல் தடவை அனுபவங்கள் உங்களுக்கு மட்டுமல்ல அனைவருக்கும் மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தருவதாக இருக்க வேண்டும் என்பதில் கவனமாகப் பயணிப்பீர்களாக.*

*செபம்:-*
*ஆண்டவரே எங்கள் பயணத்தில் இடறல்கள் தரும் வீழ்ச்சிகள், எங்களுக்கு - உடல் உறுதி தரும் ஆல விழுதுகள் என்று உணர்ந்து ; இறுக இருகரம் கொண்டு பற்றி எழுந்திட வல்லமை தாரும்.*

## நான்காம் நிலை

*அன்னையவள் அன்பு மகனைச் சந்திக்கின்றார்*

*திவ்விய இயேசுவே....*

*ஆறுதல் தருவது மனிதசெயல்*
*ஆக்கம் அளிப்பது ஆண்டவன் செயல்*

*தொட்டு விடும் தூரத்தில் உடல் மொழியை ஒரே பார்வையில் படித்துவிடும் நிகழ்வை சந்திப்பு என்று கூறுகின்றோம். .யூதப் பெண்ணான அன்னையவள், அன்பு மகனை அவ்வளவு அருகில் இந்தக் கல்வாரி பயணத்தில் சந்திக்கக்கூடுமோ?. பாடுகள் நிறைந்த தன் மகனின் பயணத்தில் அன்னையவள் தாயாக ஆறுதல்கூற தவிப்பும் ஆதங்கமும் கொண்டவளாக இயேசுவை சந்திக்கின்றார். எப்போது ஒருவர் மற்றவருடைய உழைப்பை மதித்து அந்த உழைப்பால் அவர் பெரும்துன்பங்களை கண்டு உதவிட நினைக்கிறார்களோ; அப்போது துன்புறும் நபர் பெருமாறுதல் விலைமதிப்பற்றது. வேதனைப்படும் நபருக்கு நம்மால் ஒன்றும் செய்ய இயலாத நிலையில் நாம் தரும் இந்த மனதுருக்கம் கொண்ட ஆறுதல் தரும் எந்த ஒருசெயலும் போற்றுதற்குரியது. இது அவர்களை ஊக்குவிப்பதோடு உரிய இலக்கை அடைவதற்கும் உறுதியை தருகின்றது.*

*இளைய சமுதாயமே, நடைமுறையில், நமக்கு ஆறுதல்பெறுவதில் துடிப்பு உள்ளவர்களாக - நாம் இருக்கின்றோம். அதேவேளையில் அன்னை மரியாளைப் போன்று, அந்த ஆறுதலை பிறருக்கு தந்து ஊக்குவிக்க நாம் அனைவரும் அழைக்கப்பட்டும் இருக்கின்றோம். வசதிகளும், வாய்ப்புகளும் இருக்கும் போது; ஆறுதல்கூறுவதில் என்னபெருமைபாராட்ட முடியும்?. இதோ மரியாளைப் போன்று இயலாத நிலையிலும், இன்னல்களின் - இறுக்கத்தின் நடுவிலும் இருகரம் விரித்து இதயபூர்வமாக ஆறுதல்கூற நாம் முயற்சிசெய்ய வேண்டும். பல நேரங்களில் " நமக்கே இங்கு ஆயிரம்பிரச்சனைகள் இதில் இவர் வேறு " என்று சலித்துக் கொள்கிறோம் ; உண்மைதானே. வாருங்கள் - எழுவோம். சலிப்பை-விட்டுவிடுவோம், சந்திப்புகளை அர்த்தமுள்ள தாக்குவோம். அனேகமாக இப்போதெல்லாம் முகநூல், வாட்ஸப் , மின்னஞ்சல் இணையம், என முகம்காணா சந்திப்புகளில் மூழ்கிக்கிடக்கும் இளைய சமுதாயமே - அன்னை மரியாள் மற்றும் அவர் மகன் போல ; நேருக்குநேர் ஒருவர் மற்றொருவரின் உணர்வுகளை மதித்து, பார்த்து, புரிந்து அன்பையும் ஆறுதலையும் - அரவணைப்பையும் - தந்திட தொடர்ந்து பயணிப்போம் . ஆம் வாழ்க்கை வாழ்வதற்கே.*

*செபம் :-*
*இறைவா உமது ஆவியும் சாயலும் கொண்ட எனது உறவுகளோடு -என் அயலானோடு - நல்ல புரிதலுடன் - நம்பிக்கை தரும் என் அன்பையும் ஆறுதலையும் உரிமையுடன் பகிர்ந்துகொள்ள அருள்தாரும்.*

## ஐந்தாம் நிலை

*சிரோன் ஊரைச் நேர்ந்த சீமோன், இயேசுவுக்கு சிலுவையைச் சுமக்க உதவி செய்கின்றார்.*

*திவ்விய இயேசுவே.......*

*இயன்ற உதவி செய்வோம், இயல்பாக இருப்போம்*
*இறைவன் அடி சேர்வோம்.*

*வயல்வெளியில் உழைத்து களைப்புடன் வந்துகொண்டிருந்த சீமோன் , கண் முன்னே கடந்து சென்ற கூட்டத்தில் என்ன நடக்கின்றது என அறிந்துகொள்ளும் ஆர்வத்தில் எட்டிப் பார்த்ததால்; உரோமைச் சேவகர்கள் அவரை இயேசுவின் சிலுவையைச் சுமக்கும் படி நிர்பந்திக்கிறார்கள். சீமோன் முடியாது என விலகி இருந்தால் சேவகர்களின் வேதனை தரும் துன்பங்கள் அவருக்கு நிச்சயம் கிடைக்கும். சிலுவையைச் சுமக்க "ஆகட்டும் என" அவர் ஒத்துழைத்தால் இயேசுவிற்குச் சிறிதளவாது இளைப்பாறுதல் நிச்சயம் கிடைக்கும். உண்மையை உணர்ந்த சீமோன் இயேசுவுடன் கரம் கோர்த்து பாரமான சிலுவையை அவருக்காக, அவர் யாரென்றே அறியாத நிலையில் - ஒரு சக மனிதனுக்கு உதவுகின்ற நிறைவில் சுமந்து முன்னேறினார். சரித்திரத்தில் , கல்வாரிப் பாதைக்கு ஓர் அடையாளம் ஆனார்.*

*சரித்திரத்தின் நாளைய விடியல்களே..... இந்தச் சிரோன் ஊரைச் சேர்ந்த சீமோன் சொந்த விருப்பு-வெறுப்புகளைக் கடந்து சகமனிதருக்கு அவருடைய நிர்பாக்கியமான முடியாத நிலையில் உதவி செய்ய முற்பட்டதால், இன்றும் நம் நினைவிற்கு உரியவரானார். போகின்ற வழியில் ஏதோ தன்னால் இயன்ற உதவியைச் செய்வோமே என்ற நல்ல உணர்வு, சக மனிதனின் தேவையைப் புரிந்து கொண்ட உள்ளம்; களைத்து வந்த நிலையிலும் மனம் உண்டானால் மார்க்கம் உண்டு என்பதற்கு இணங்க இந்த நல்ல சமாரியன் சீமோன் உதவிட பின் தயங்கவில்லை. ....வாருங்கள் வாய்ப்பு இப்போது உங்கள் கைகளில்!*

*"உங்களைச் சுற்றியிருக்கும் இயலாதவர்களுக்கும் - இல்லாதவர்களுக்கும் ; நீங்கள் இன்று இயன்றதைச் செய்தால் நாளைய நல்ல சமாரியன் நீங்கள்தான். புறப்படுங்கள் மாற்றத்தை வரவேற்க......*

*செபம்:-*
*இறைவா, இனி எப்போதும், இயன்ற நன்மைகளைச் செய்யும் இயல்புடையவர்கள் ஆகவும், அதனால் உறவுக்குள்ளும் - ஊருக்குள்ளும்... முடிவாக உமக்குள்ளும் நாங்கள் நல்லசமாரியன் ஆகக் காணப்படும் அருள்தர உம்மை மன்றாடுகின்றோம்.*

## ஆறாம் நிலை

*ஆண்டவர் இயேசுவின் முகத்தை வெரோனிக்காள் என்ற பெண் துடைக்கிறார்*

*திவ்விய இயேசுவே.....*

*தன்னம்பிக்கையின் மறு பக்கம்
துணிச்சலுடன் கூடிய செயல் திறன் ஆகும்.*

*தமிழ்மொழியின் வழக்குச் சொற்களில் "இளம் கன்று பயம் அறியாது – துணிவே துணை"போன்ற வார்த்தைகளைப் பலமுறை நாம் கேட்டிருக்கின்றோம். இத்தகைய வார்த்தைகளின் அடையாளமாக இந்தக் கல்வாரிப் பாதையில் - சிறு பெண் வெரோனிக்காள் நிமிர்ந்து நிற்கிறாள். ஒருவேளை இச்சிறுமி இச்செயலை செய்யாமல் இருந்திருந்தால் ஆண்டவருடைய அழகான திருவதனம் இன்று நமக்குக் கிடைத்திருக்காது. செய்நன்றி மறவாத நம்தேவன் தன் திருமுகத்தைத் துணியில் பதித்து விடுகின்றார். அந்தத் துணியோ ! அதில் உள்ள திருவதனத்தால் சிறுமி வெரோனிக்காவின் செயலையும் , அதன் பெருமையையும் ; காலத்திற்கும் நிலை நிறுத்தியது. வெரோனிக்காள் நமக்குக் கற்றுத்தரும் பாடம் துன்பம் ,துயர் , இடர்களின் நடுவில் துவண்டு போகாமல் எப்படிச் செயலாற்றுவது என்பதுதான் .*

*இளையோரே இனியவர்களே உங்களுக்குத் தெரியுமா?*

*தன்னம்பிக்கை உள்ளவர்களிடம் துணிச்சல் அதிகம். துணிச்சல் உள்ளவர்களிடம் செயல்திறன் அதிகம்.செயல்திறன் உள்ளவர்களுக்கு, வெகுமதியும் பாராட்டுகளும் அதிகம். நமது இந்தியபுனிதை அன்னை திரேசா அவர்களுக்கு உலகின் உன்னத விருதான நோபல் பரிசு வரை வழங்கப்பட்டது எதனால் என்று தெரியுமா? வேறொன்றுமில்லை, அவர்களிடம் காணப்பட்ட தன்னம்பிக்கையும், அதனால் அவர் பெற்ற துணிச்சலும், அதன் விளைவாக அவருடைய செயல்களின் வெளிப்பாடும் ; எல்லாப் பெருமைகளையும் அவரிடம் கொண்டு வந்து சேர்த்தன. பாராட்டுக்கள் நம்மை வந்து அடைந்தால் யார் தான் பெருமை படாமல் இருக்க முடியும். ஆனால் அத்தகைய பெருமையை அடைய; துணிச்சலுடன் செயல்பட முதலில் உங்களை நீங்கள் நம்ப வேண்டாமா?. நம்புங்கள் ; அன்னை திரேசாவிற்குக் கிடைத்த பெருமை உங்கள் தன்னம்பிக்கைக்குள் ஒளிந்துகிடக்கின்றது. துணிச்சலுடன் வெளியே கொண்டு வாருங்கள் ; பெருமைகளை, சிறப்புகளை உங்களுடைய உரிமை ஆக்குங்கள். அறுவடை அதிகம், எனவே பல வெரோனிக்காவை உருவாக்குங்கள்*

*செபம்:-
ஆண்டவரே எங்கள் அவநம்பிக்கையை அகற்றி, தன்னம்பிக்கையுடன் கூடிய துணிச்சலை பெற்று மிகுதியான அறுவடையை உமது களஞ்சியத்தில் சேர்க்க எங்களை ஆசீர்வதியும்.*

## ஏழாம் நிலை

*ஆண்டவர் இயேசு இரண்டாம் முறைக் கீழே விழுகிறார்*

*திவ்விய இயேசுவே....*

*வீண் பேச்சும் , காலவிரையமும்*
*லட்சியப் பயணத்தின் மாபெரும் தடைகள்.*

*இயேசுவிற்கு என்ன ஆயிற்று ! இரண்டாம் முறை விழக்காரணம் என்ன? இதோ தொடர்ந்து அன்னை , சீமோன், அன்புச் சிறுமி வெரோனிக்கா - என அனைவரும் துணை நின்று உதவிச் செய்தும் ; இறைச் சித்தத்தை மேற்கொண்டு செயல்படும் வழியில் இவர் இரண்டாம் முறைக் கீழே விழ்ந்திடக் காரணம் என்னவாக இருக்கும் ?*

*ஒருவேளை இன்பத்தையும் , மகிழ்ச்சியையும் மட்டும் மனதார - எப்போதும் வரவேற்கும் இளையவனே, உன்னோடு பயணிக்கும் , உனது ஏனோதானோ என்ற மெத்தனப் போக்குக் காரணமாய் இருக்குமோ? கவனியுங்கள்*

*இளையோரே*
*நீங்களும் இயேசுவைப்ப்போல் இறைச் சித்தத்துடன் இணைந்துப் பயணித்து உங்கள் வாழ்க்கையில் சீரும் சிறப்பும் மேன்மையும் அடைந்திட உங்களுக்கு உதவியும் ஊக்கமும் தரும் பெற்றோர், உறவினர் ,ஊரார் , இந்தச் சமுகம் - உலகம் : என எல்லோரும் எப்போதும் உங்களுடன் இருப்பதால் " கவலை என்ன " என்ற ஒரு மெத்தனப் போக்கோடு , மமதையோடு , உங்கள் கடமைகளில் தவறுவதை இயேசு கண்கூடாகப் பார்ப்பதாலும் ; வாய்ப்புகளைப் பயன்படுத்தாத ஒரு திணாரியம் பெற்ற வேலைக்காரன் போல் வீண் பேச்சோடும் காலவிரையத்தோடும் வாழ முற்படுவதைக் காண்பதாலும்; இயேசுவின் மனம் அடையும் வேதனையின் விளைவாக ; அவர்பயணத்தில் தடுமாற்றம் - அதன் விளைவு இதோ மீண்டும் கீழே விழுந்துவிட்டார். நண்பர்களே நன்கு யோசியுங்கள் ! இயேசு மீண்டும் கீழே விழ வேண்டுமா? அல்லது நீங்கள் - உங்கள் முன் இருக்கும் நன்மைகளை உதவிகளைப் பயன்படுத்தி மேலும் ஐந்து திணாரியங்களை வெகுமதியாகப் பெற்றுத் தலைவனின் பாராட்டைப் பெற்ற, கருத்துள்ள இறைவனின் ஆசிப் பெற்ற ஊழியக்காரனாக வாழ ஆசைப் படுகிறீர்களா? வெகுமதியா? வீழ்ச்சியா? யாருக்கு....? முடிவு உங்கள் கைகளில் !!!.*

*செபம்:-*
*இறைவா வீண்பேச்சிற்கும், வீணானக் காலவிரையத்திற்கும் எங்கள் எதிர் காலத்தை வீணாக்காமல் இதோ ஐந்து திணாரியங்களை வெகுமதியாகப் பெற்ற கருத்துள்ள ஊழியனாக எங்கள் பயனத்தைத் தொடர உமது அருளைத் தரும்.*

## எட்டாம் நிலை

*யூதப் பெண்களுக்கு இயேசு ஆறுதல் கூறுகிறார்.*

*திவ்விய இயேசுவே......*

*எச்சரிக்கைகளை எளிதாக எடுக்க வேண்டாம்*
*பின் விளைவுகளை மறக்கவும் வேண்டாம்*

*கானாவூரில் அன்னையவள் , அவர் சொல்கிறபடிச் செய்யுங்கள் என்று திருமண வீட்டுப் பணியாளர்களுக்குக் கூறினார், .பணியாளர்கள் அவ்வாறே செயல்பட்டதால் திருமணவீடு களைகட்டியது. அன்றும்சரி இன்றும்சரி இயேசு மீண்டும் மீண்டும் கூறுவது, எச்சரிப்பது நமக்காகவும் நமது பிள்ளைகளுக்காகவும் கவனத்துடன் செயல்படவேண்டும் என்பதே. இயேசு இன்று உயிருடன் நம்மிடையே நல் ஆயனாக வாழ்வதையும் அவர்கள் தரும் எச்சரிக்கைகளை நாம் கண்டு கொள்ளாமல் இருப்பதும்தான் அவருக்கு வேதனைத் தருகின்றது. கொந்தளிக்கும் கடலில் , தத்தளித்த படகில் ; இயேசு இருப்பதைச் சீடர்கள் பார்த்தார்கள் - முடிவு - காற்றும் கடலும் அவருக்குக் கீழ்படிந்ததையும் அமைதி உண்டானதையும் உணர்ந்தார்கள் அனுபவித்தார்கள்.*

*பெற்றோர்களே உங்களுக்கு , உங்கள் பிள்ளைகள் வாழ்வின் உச்சத்தைத் தொட வேண்டும் என்ற ஆசை ! . பிள்ளைகளுக்கோ மகிழ்ச்சி ஒன்றையே கொண்டாட ஆசை. நல்லதுத் தான், ஆனால் நாம் எல்லோரும் மரண விளிம்பில் விடுதலைபெற்ற நல்ல கள்வன் அல்லவே!. மாறாகப் பேதுருவைப் போல் முன்கூட்டியே எச்சரிக்கப்பட்ட அவருடைய சீடர்கள் அல்லவா?*

*இப்படி இருக்க, நாம் முன்மதி கொண்ட ஐந்து கன்னியர் போல எண்ணையுடன் ஆயத்தமாக இருக்க ஆசைப்பட வேண்டாமா ? மற்றும் - இயேசு வருங்கால நிகழ்வுகளைக் குறித்து யூதப் பெண்களுக்கு விழிப்புடன் இருக்க எச்சரிக்கைத் தந்ததைப்போல நமக்குள்ளும் , பேதுருவுக்குள் - இரவுக்குள் நிகழ்ந்த மாற்றத்தைப் பார்க்க ; நம்மை எச்சரிக்கின்றார். அறிவிலியான ஐந்து பெண்கள் - இருந்த எண்ணெயுடன் மணவாளனை எதிர் கொண்டது போல ; "அன்றாட உணவு மட்டும் போதும்" என்று நிறைவு கொள்ளாமல், விழிப்புடன் வரும் காலத்தை வசப்படுத்த அழைப்பு விடுக்கின்றார். வாருங்கள் வார்த்தையின் வழிநடத்தலுடன் வருங்காலத்தை வசப்படுத்துவோம்.*

*செபம்:- நல்ல ஆண்டவரே, எதிர்பார்ப்புகளின் தேடல்களில், எங்களை நாங்கள் இழந்து விடாமல்-எச்சரிக்கையுடன், ஏகமனதுடன், விழிப்புடன் உமது வார்த்தைகளை உள்வாங்கி; உயிரோடு இவ்வுலகிற்கு அடையாளப்படுத்த எங்களுக்கு அருள்தாரும்.*

## ஒன்பதாம் நிலை

*ஆண்டவர் இயேசு மூன்றாம் முறையாக மண்ணில் விழுகின்றார்*

*திவ்விய இயேசுவே.....*

*நிர்ப்பந்தங்களின் ஆளுமைக்கு உட்படும் மனிதனுக்கு –*
*இறை ஆளுமை நிலை வாழ்வைத் தரும்.*

*நிர்பந்தங்கள் அல்லது காலத்தின் வினைப்பயன், மற்றும் அதற்குக் கட்டுப்பட்ட மனிதன் என இந்த இரண்டுமே, இறைவனுக்குக் கட்டுப்பட்டவை. ஆபிரகாமுக்கு வயது முதிர்ந்தகாலத்தில் இறைவனால் வாக்களிக்கப்பட்டு பெற்றஒரே மகனைத் தகனப்பலியாகப் படைக்கவேண்டிய நிர்பந்தம். அலகையே வியக்கும் அளவிற்கு நீதிமானும் செல்வச்செழிப்பும் கொண்ட யோபுவிற்கு உடல் எல்லாம் புழுக்களால் அழிக்கப்பட்டுச் சாம்பல்பூசிப் புழுதிமீது வீதியில் அமரும் அவலநிர்பந்தம். இயேசுவிற்குத் தன் மனித உடல் வலிமை அனைத்தையும் பயன்படுத்திய பின்பும் சுமக்க இயலாதப் பாரத்தால்; மண்ணின் மீது மூன்றாம் முறையாக விழுகின்ற நிர்பந்தம். இப்படிப்பட்ட, நிர்மூலம் ஆக்குகின்ற நிர்பந்தங்களின் நடுவில் இவர்கள் மூவரும் நிலையாக நின்றது "இறை நம்பிக்கையோடு" மட்டும்தான். விளைவு– நிறைவானச் சந்ததி, வளமான வாழ்வு , ஏன் " மரணத்தையே வெல்லும் மனுக்குல மீட்புப் பெற்று " காலத்திற்கும் நின்றார்கள்.*

*வலிமைமிகு வாலிப உள்ளங்களே, நீங்கள் கூடக் கடந்துவந்த , அல்லது கடக்கப் போகின்ற பாதைகளில் மேற்குறிப்பிட்டக் காலத்தின் கட்டாயங்களைச் சந்தித்தவர்கள், அல்லது சந்திக்க வேண்டியவர்களே. நிர்பந்தங்களின் நடுவில் உங்களுடைய முழுதிறமைகளை, முழுமுயற்சிகளைப் பயன்படுத்தியும். வீழ்ச்சியும் தோல்விகளும் மட்டுமே புலப்படும் ஆயின் ; அந்த நேரத்தில் நீங்கள் மறக்கக் கூடாதது உங்களுக்குள் உயிர்கொண்டிருக்கும் இறைநம்பிக்கையை மட்டுமே. தாவீதை, என் மகன் தாவீது என அழைக்க வைத்தது அவருள் இருந்த இந்த இறை நம்பிக்கைதான். இந்த இறைநம்பிக்கையும் வல்லமையையும் மட்டும்தான் "உங்களுடைய வளமான எதிர்காலத்தின் மூலைக்கல் "ஆகும். கட்டுவோர் விலக்கியக் கல்லாக நீங்கள் இன்று விழுந்து கிடந்தாலும் உங்களுள் இருக்கும் இறை நம்பிக்கையால் நாளைய சமுதாயத்தின் மூலைக் கற்களாக வலம் வருவீர்கள் என்பதில் ஐயம் இல்லை. வாருங்கள் வானக வல்லமையோடு வலம் வருவோம், வாழ்வைத் தருவோம்.*

*செபம்:–*
*நல்ல தெய்வமே, கட்டுவோரால் விலக்கப்பட்ட கல்லாக வீழ்ந்து கிடந்தாலும் "இறைநம்பிக்கை என்ற சம்பட்டியால் செதுக்கப்பட்டு" மூலைக்கல்லாகக் கட்டுவோர் கைகளில் பயன்தர அருள்தாரும்.*

## பத்தாம் நிலை

*ஆண்டவர் இயேசுவின் ஆடைகளை அகற்றுகின்றார்கள்*

*திவ்விய இயேசுவே......*

*கிறிஸ்து என்ற தூய வெண்ணிற ஆடையை அணிந்துக் கொள் ;*
*அதனை மாசுமருவின்றிக் காப்பாற்று.*

*தாபோர் மலையில் தம் ஆடைகளை ஒளியாய் ஒளிரச் செய்தத் தேவன் - கல்வாரியில் படைவீரர்களின் வண்செயலால் ஆடைகளை இழந்து, உடலின் காய்ந்துபோன காயங்கள் திறக்கப்பட, செந்நீர் - ஆடையாய் வழிந்தோட பிறந்த மேனியுடன்; உலகோர் முன் கல்வாரியின் பரிசுத்த பலிப் பொருளாக நிறுத்தப்படுகின்றார். தனது ஆடையற்ற நிலையை - நிர்வாணத்தை "நினைத்துப் பார்க்கவே" அச்சப்படும் , கூச்சப்படும் இந்த மனிதக் கூட்டத்தின் முன் மாபரன் இயேசு ஆடை அற்றவர் ஆனார். இந்த நிலைத் தனது பகைவனுக்கும் வரக்கூடாது என நினைக்கும் இயேசுவிற்கு - உதவ, நாம் என்ன செய்ய முடியும்?. ஆம் ; கிறிஸ்துவிற்கு ஆடையாகவும் , கிறிஸ்துவே நம் ஆடையாகவும் அணிந்துகொள்ள உறுதிக் கொள்வோம் !.*

*கிறிஸ்துவுக்குள் இணைந்துள்ள இளைய சமூகமே !*

*கிறிஸ்தவ வாழ்வில் , திருஅருட்சாதனங்களைப் பெரும்பொழுது ; தூய வெண்ணிற ஆடை அணிவதில் நாம் பெருமை அடைகின்றோம் . அதே வேளையில் , அந்த ஆடையில் - அந்த நிகழ்வில் ; நம்மைக் காணும் அயலானுக்கு ஒரு கிறிஸ்துவாக நாம் அடையாளப் படுத்தப்படுகின்றோம் என்பதை யாரும் மறுக்க முடியாது. நம்மைத் திருவருட்சாதனங்கள் ஒரு முழுக் கிறிஸ்துவாக , முழு மனிதனாக மாற்றுவதையும் ஏற்றுக் கொள்ளாமல் இருக்க முடியாது. பாருங்கள் ஆடை இல்லாத மனிதன் அரை மனிதன் என்பது பழைய மொழி இன்றோ ஆடையை அகற்றும் மனிதனும் அரை மனிதனே என்பது , புரிந்து கொள்ள வேண்டிய புதுமொழி. எனவே மனித நேயம், மன்னிப்பு, அன்பு என்ற - கிறிஸ்துவின் சமாதான வெண்ணிற ஆடையை மற்றவர்களும், நாமும்- முழு மனிதனாக வாழ என்று அணிந்து மகிழ்ந்திட; வரம் வேண்டி மன்றாடுவோம்.*

*செபம் :-*
*இறைவா , உலகோர் முன் நாங்கள் காட்சிப்பொருளாக நிறுத்தப்படும்போது ; உம்மை , உனது மனித வாழ்வின் - மனிதநேயம், மன்னிப்பு, அரவணைப்பு என்ற விழுமியங்களை ; வெளிப்படையாகக் காட்சிப்படுத்த எங்களை உறுதிப்படுத்தும்.*

## பதினொன்றாம் நிலை

*ஆண்டவர் இயேசுவைச் சிலுவையில் அறைகிறார்கள்*

*திவ்விய இயேசுவே.....*

*எல்லைதாண்டும் எதிர்பார்ப்புகள்*
*எல்லையில்லாக் குற்ற உணர்வைத் தருகின்றன*

*இயேசுவின்பொதுவாழ்வின் மூன்றுஆண்டுகளில் அனைத்து அற்புதங்களையும் புதுமைகளையும் ஆசீர்வாதங்களையும் பெற்ற யூதமக்கள் கூட்டம் , தங்களுடைய அரசியல், பொருளாதார விடுதலைக்காகச் சுய நலத்தோடு, " நன்றி மறந்தவர்களாக இவரைச் சிலுவையில் அறைந்துக் கொல்லும் " என மரணஓலம் இட்டு , படைவீரர்களைக் கொண்டு இயேசுவின் கைகளைவிரித்து , கால்களைஇணைத்து " சிலுவையில் - செயலற்ற-நிலையில்" மூன்று ஆணிகளால் அறைந்தார்கள். திருத்தொண்டர் பவுல் பிலிப்பியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்தில் இவ்வாறு கூறுவார் - கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டிய ஒன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி மனித உருவில் தோன்றி, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்தார் என்று. ஆம் , இயேசு மனுக்குல மீட்பிற்காக , மனிதனாக இந்தக் கொடூரமான வேதனைகளை ஏற்றுக்கொண்டார்....*

*இளையோரே, இனிய உள்ளங்களே ! இறைவனோடு*

*அப்பா-தந்தாய் என்ற உறவுக்குள் நம்மை உறுதியாக இணைத்திட இயேசு மரண வேதனைக்குஆளானார். நாம்பயணிக்கும் வழிகளில்" இருப்பதில் நிறைவுக் கொள்ளாததால் ஏற்படும்பற்றாக்குறை - பற்றாக்குறையால் பாதிக்கப்படும் சுயநலம் - பாதிக்கப்பட்ட சுயநலத்தைச் சரி செய்ய மனம்தேடும் எதிர்பார்ப்புகள் .அதனால் ஏற்படும் ஏமாற்றங்கள் ; இன்றும், நம்மையும் செயலற்றவராகத் தனிமைப் படுத்துவதை யோசியுங்கள்.. நமக்கு இன்று ஏற்படும் வேதனை மற்றும் ஏமாற்றத்தால் நம்மை நேசிக்கும் நம் உறவையும் , துணை நிற்கும் சமூகத்தையும் , வளங்களால் வாழவைக்கும் உலகையும் - எத்தனைமுறை செயலற்ற நிலைக்கு அந்தப் படைவீரர்களைப் போல் தள்ளி வைத்திருக்கின்றோம் - உண்மைதானே. "தவிர்ப்போமே - இந்தஒவ்வாமையை". எதார்த்தமான, நிதர்சனமான நிஜங்களுடன் வெளிப்படையாக அனைவரோடும் இணைவோம். இந்த இணைப்பு நம்மை – இயேசுவின் வெற்றிச்சின்னமாக உலகிற்கு அடையாளப் படுத்துவதை, நிச்சயம் ; காலம் சாட்சியப் படுத்தும்.*

*செபம்:-*
*இறைவா , பற்றாகுறை, சுயநலம் எதிர்பார்ப்புகள் - இதன் விளைவாக ஏற்படும் ஏமாற்றம் என்ற கண்ணுக்குப் புலப்படாத கனைகளில் இருந்து விடுபட்டு; தனிமையைத் தவிர்த்து : இயற்கையோடும் உம்மோடும் இணைந்து வாழ வரம் தாரும்.....*

## பன்னிரண்டாம் நிலை

*ஆண்டவர் இயேசு சிலுவையில் உயிர்விடுகிறார்.*

*திவ்விய இயேசுவே.....*

*இனி தருவதற்கு ஒன்றுமில்லை , எனது இன்னுயிரைத் தவிர.....*
*ஆனால் ... யாரிடம்? யாருக்காக ? என்ற கேள்விகள் தொடர்கின்றன...*

*கல்வாரி மலைமீது, சிலுவை என்ற பீடத்தில்,மூன்று ஆணிகள் என்ற சிம்மாசனத்தில் , முள்முடி என்ற மகுடத்துடன் , செந்நீர் ஆடையுடன், வாடிய வதனத்துடன், வாய்திறந்துத் தலைசாய்த்துக் கூறினார் :- "தந்தையே உன் கரங்களில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்"... என்று.*

*இயற்கைச் சீற்றம் கொள்ள - கடைசிச் சொட்டு ரத்தமும் - நீரும் ; இவ்வளவு நிகழ்ந்தப் பின்னும் குருடனாய் இருக்காதே என்று பார்வைத் தந்துவிட, நூற்றுவர் தலைவன் சான்றுப் பகர, இறந்தோர் உயிர்பெற்றுப் பவனி வர, உறவுகள் மூவர் உடனிருக்க, - நானே உயிர், நானேஉண்மை, நானே வழி என்ற இயேசு பெருமான்.. விடைபெற்றார். ஆம் எல்லாம் முடிந்தது.....என , வாக்கு மாறாது வாழ்ந்துக் காட்டிய தேவன், நம்மை வாழ அழைக்கின்றார்.*

*மௌனம்..... காப்போம் ... முழந்தாள் இடுவோம்... மனமாற்றம் அடைவோம்.*

*இயேசு - ஒரு முறைத் தன் நண்பனுக்காக உயிரைத் தருவதை விட, மேலான அன்பு ஒன்றுமில்லை என்று கூறினார். கல்வாரியின் கனியான மன்னிப்பின் வழியாக......நாம் இதோ, அந்த அன்பை அனுபவித்துக் கொண்டு இருக்கின்றோம். தினம்தினம் நாமும் இறைவனிடம் " பிறர் குற்றங்களை நாங்கள் மன்னிப்பது போல " என்று வாக்குத் தருகின்றோம். வாக்கு மாறாத தேவனைப் போல் வாழ்ந்துக் காட்ட , வையகம் வாழ இலவசமாகப் பெற்ற மன்னிப்பை இன்முகத்தோடு இருகரம் கூப்பி வழங்கி வாழ்வோமாக. இம்மானுவேலான இறைவன் நம்முடன் இருக்கின்றார்.*

*அவருடைய இரத்தத்தால் நாம் பார்வைப் பெற்றவர்கள்.*

*வாருங்கள் அவரை வணங்கி ஆராதிப்போம்.*

*செபம்:-*
*இயேசுவே நாங்கள் அயலானைக் கண்டு , மன்னித்து , அரவணைத்து , ஆறுதல் தரும்போதுதான் எங்கள் பார்வை ஒளியோடு இருப்பதை அறிந்துக் கொண்டோம். பெற்றுக்கொண்ட ஒளியை மரக்காலின் தண்டின் மேல் - சிலுவையின் மேல் வைத்து , ஒளிர்ந்திட உதவிச் செய்தருளும்.*

## பதிமூன்றாம் நிலை

*அன்னையவள் மடியில் , அன்பு மகனை வளர்த்துகிறார்கள்.*

*திவ்விய இயேசுவே....*

*ஏற்றுக்கொண்ட கொள்கைகளில் நிலைத்திருந்தார்.*
*கொலைக் களத்திலும் சாட்சியாக நின்றார்,*
*முடிவாக ஆவியின் அபிஷேகத்திற்குத் தலைமை ஏற்றார்.*

*கல்வாரிமலையில்.. சிலுவையின் அடியில் - யாரும் காணக்கூடாத, ஆனால் உலகமே கண்டு வியந்த ஒரு காட்சி நிறைவேறுகின்றது. அன்னை மரியின் மடியில் அன்பு மகன் இயேசுவின் உடலை வளர்க்கின்றனர். இந்தக் கொடூரமான வேதனைமிகு வேளையிலும் அன்னை உறுதியுடன் - உயிருடன் - இறைவனின் விருப்பத்திற்கு மட்டும் உரிமைத் தந்த உத்தமியாகச் சிலுவையடியில் நின்றுகொண்டு இருப்பதைக் காண்கின்றோம்.*

*நல்ல உள்ளங்களே,*

*நாம் சந்திக்கும் நிர்பந்தங்கள்தரும் கஷ்டங்கள்-வேதனைகளை அன்னையின் வேதனைமுன் ஒப்பிடும்போது மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்றுமையைப் பார்க்கமுடியும். அன்னை மரியாளுக்கு இப்படி ஒரு மாபெரும்சக்தி எப்படி உண்டாயிற்று? மனிதர்களுக்குள் பேறு பெற்றவராக, இறைவனின் ஆசீர்நிறையப் பெற்றவராக; வாழ்ந்ததற்கானகாரணம் -அவர்களுடைய சொந்த எதிர்பார்ப்புகள் இல்லாத வாழ்வுதான். மரியாள்தனது சொந்தவிருப்பங்களை நினைத்தும் பார்க்கவில்லை, ஏன்? எப்படி? என யோசிக்கவுமில்லை. கடவுளுடைய விருப்பமே , அவர்களுடைய வாழ்வாக இருந்தது.*

*நம் வாழ்வை நிலைகுலையச் செய்யும் நிர்பந்தங்களைச் சந்திக்கும் போது , உறுதியுடன் நிலைகுலையாமல் நிற்க வேண்டும் என்பதுதான் அன்னையின் விரும்பம் , அந்த விருப்பம் நிறைவேற - அவர் சொல்கிறபடிச் செய்யுங்கள் - என்ற காணவூர் கட்டளைக்குக் கீழ்ப்படியும் வேலைக்காரனாக மாறுவோம் .அன்னையின் விரும்பம்போல் இறைவார்த்தையை வாழ்வாக்கவும், மண் இனிக்க மனிதத்தில் மன்னிப்பை விதைக்கவும, பயனாக அகிலத்தில் அனைவருடன் மகிழ்ந்து வாழ்ந்திட - முழு நேர வேலைக்காரனாக வாழ்வைத் தொடருவோம். எல்லாநாட்களும் நமது விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்விக்கும் அன்னைக்கு இன்று அவர் பெற்ற துன்பத்தை அகற்ற ஒரு முறை அவர் விருப்பப்படி வாழ ஏன் முயற்சி செய்யக்கூடாது ? . வாருங்கள் முடியும் , முயற்சிப்போம்.*

*செபம்:-*
*மரியே, இறை ஆளுமைத் தவிற - வேற எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் , உம்மோடு உமது மகனையும் மகிழ்விக்கும் அன்பு மக்களாக - ஏமாற்றம் தராத இறைவார்த்தையின் வாழ்க்கையை நாங்கள் வாழ , வரம் தரும்....... .*

**பதினான்காம் நிலை**

*ஆண்டவர் இயேசுவைக் கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்*

*திவ்விய இயேசுவே*

*எந்த அழிவும் ஓர் ஆக்கத்தைத் தரும். எந்த ஒரு முடிவும் ஒரு புதுத் தொடக்கத்தை உறுதிப்படுத்தும்...*

*இயேசுவின் உடலை எடுத்து யூத அடக்க முறைப்படி நறுமணப் பொருள்களுடன் துணிகளால் சுற்றிக் கட்டினார்கள்.அவர் சிலுவையில் அறையப்பட்டிருந்த இடத்தில் ஒருதோட்டம் இருந்தது. அங்கே புதிய கல்லறை ஒன்று இருந்தது. அதில் அதுவரை யாரும் அடக்கம் செய்யப்படவில்லை. அன்று பாஸ்கா விழாவுக்கு ஆயத்த நாளாய் இருந்ததாலும் அக்கல்லறை அருகில் இருந்ததாலும் அவர்கள் இயேசுவை அதில் அடக்கம் செய்தார்கள்.*

*இயேசுவின் அடக்கத்திற்குச் சான்றுப் பகர்ந்த யூதர்களும் ,உரோமைப் படைவீரர்களும் -ஏன்? - உடன்வந்த உறவினர்களும்; மனதில் எல்லாம் முடிந்தது என்று நினைத்திருப்பார்கள். இயேசு சிலுவையில் இறைவனின் சித்தப்படி நிகழ வேண்டியவை அனைத்தும் நிகழ்ந்தது என்பதால், எல்லாம் முடிந்தது என்று அறிக்கையிட்டார். கல்வாரியில் கூடி இருந்த கூட்டம் ஒரு மகனை - ஒரு மனிதனை - ஒரு புரட்சியாளனை உலகில் இருந்து அகற்றிவிட்டோம் ; அடக்கம் செய்துவிட்டோம் : எல்லாம் முடிந்தது என்று நினைத்திருக்கலாம்.*

*இயேசுவின் அடக்கத்தைத் தியானிக்கும் இளம் உள்ளங்களே*

*இப்போது நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் எல்லாம் முடிந்தது என்றா?.. அல்லது இதன் விளைவாக இனி வரப்போகும் ஆக்கத்தையும் தொடக்கத்தையும் வரவேற்க வேண்டும் என்றா?. இயேசு இறைச்சித்தத்திற்குள் தன்னை அடக்கம் செய்ததார், உயிர்ப்பு அவருடைய உரிமையானது. நிர்பந்தங்களை நிர்மூலமாக்கும் மனத்தெளிவு, மன உறுதி, உங்கள் உடல்பலம் ஆகியவைகளை உங்களோடு இணைந்து வாழும் இறை அருளுக்குள் அடக்கம் செய்வீர்களாக இதனால் பிறக்கும் , புதுப் பொலிவையும் புது ஆற்றலையும் பெற்றவர்களாக , கண்முன் நிற்கும் வருங்கால வாய்ப்புகளை வரவேற்பீர்களாக... அனைத்தும் நன்றாக இருந்தது என்ற அசிரிரீ உங்கள் காதுகளிலும் ஒலிக்க உங்களைத் தயார் செய்வீர்களாக.*

*செபம்:-*
*இயேசப்பா, நீர் உம்மை உலகில் இறைச்சித்தத்திற்குள் அடக்கம் செய்தீர் . நாங்கள் எங்களை உமது வார்த்தைக்குள் அடக்கம் செய்திட வரம் தாரும்.*

தொகுத்தளித்தவர்
A.C. டிசில்வா, புனித வளனார் ஆலயம், வெல்லிங்டன், ஊட்டி